ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

श्रीमन् शंभो सहजकृपया राजतो भूधरेन्द्रात्
लोकान् त्रातुं भुवनगुरुरित्यत्र नावातरश्चेत् ।
सर्वे लोका विषयसरिदापूरितादुःखनक्र
व्यालाक्रान्तात् भवजलनिधे रुत्तरेयुः कथं वा ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍 𑌶𑌂𑌭𑍋 𑌸𑌹𑌜𑌕𑍃𑌪𑌯𑌾 𑌰𑌾𑌜𑌤𑍋 𑌭𑍂𑌧𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌤𑍍
𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌤𑍍𑌰𑌾𑌤𑍁𑌂 𑌭𑍁𑌵𑌨𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌵𑌾𑌤𑌰𑌶𑍍𑌚𑍇𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌲𑍋𑌕𑌾 𑌵𑌿𑌷𑌯𑌸𑌰𑌿𑌦𑌾𑌪𑍂𑌰𑌿𑌤𑌾𑌦𑍁𑌃𑌖𑌨𑌕𑍍𑌰
𑌵𑍍𑌯𑌾𑌲𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 𑌭𑌵𑌜𑌲𑌨𑌿𑌧𑍇 𑌰𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌯𑍁𑌃 𑌕𑌥𑌂 𑌵𑌾 ॥

ஸகல ஐசுவர்யங்களுக்கும் இருப்பிடமாய் விளங்கும் ஹே சம்போ! ஹே சங்கர! உலகத்தைப் பாதுகார்க்கவேண்டுமென்கிற இயற்கையிலேற்பட்ட உமது கருணையால் நன்கு பிரகாசிக்கும் உமது வாஸஸ்தானமான கைலயங்கிரியிலிருந்தும் ஸகல ஜனங்களையும் ரக்ஷிக்கவேண்டி இம்மண்ணுலகில் லோககுரு ஸ்ரீ சங்கராசார்யாள் என்கிறதிருநாமத்துடன். நீர் அவதரிக்காமலிருந்தீரேயானால் கொடிய விஷம்போல் அதிக தாபத்தைக் கொடுக்கும் விஷயமென்கிற ஜலத்தால் நிரம்பியநதியால் பூர்ணமாயும் பல துக்கங்களாகிற முதலை அரவம் முதலிய துஷ்ட ஜந்துக்களால் சூழப்பட்டதுமான ஸம்ஸாரமெனப் பெயர்வாய்ந்த பெருங்கடலை இவ்வுலகிலுள்ள ஜனங்கள் எப்படித்தாண்டுவார்கள்.

முன்னொரு ஸமயம் புறமதஸ்தர்கள் ஸநாதந தர்மங்களையும் அவைகளைப் போதிக்கும் சாஸ்திரங்களையும் பலவாறாக இகழ்ந்து அதர்மத்தை ஸ்தாபிக்க முன் வருங்கால் கைலாஸவாஸியாயான ஸ்ரீ பரமேசுவரன் லோக குருவாக அவதரித்து துர்வாதிகளை வாதத்தில்வென்று வைதிக மதங்களை ஸ்தாபித்து ஸம்ஸாரபந்தத்தைப் போக்கடிக்கவேண்டி அரிய பல சிறந்த நூல்களை இயற்றி லோகத்திற்குப் பேருதவிபுரிந்திருக்கிறார். அவ்வித மஹானை நாம் மறக்காமல் எப்பொழுதும் தியானவந்தனாதிகளால் ஆராதித்து சிரேயஸ்ஸைப் பெறவேண்டுமென்று இதினால் போதிக்கப்படுகிறது.

சுபம்!

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

பிரபவ-௵ பங்குனி-௴ ௨௪௨


## வரதக்ஷிணை.

இப்பெயர் வாய்ந்த ஒரு பெரும்பேய் நம் தேசத்தில் அதிலும் இத்தென்னாட்டில் கொஞ்சகாலமாய் ஸஞ்சாரம் செய்து ஜனங்களுக்குச் செய்யும் கஷ்டங்களைச்சொல்லமுடியாது. துவககத்தில் அதிகச் செல்வம் நிறைந்த ஒரு தனிகர் தமக்கிருக்கும் பொருளின் மேலீட்டால் சிலவைப்பொருட்படுத்தாமல் மிகவும் உத்ஸாகத்துடன் தம் புத்ரி விஷயமான விவாகத்தில் வானுக்கு வரதக்ஷிணை என்று கொஞ்சம் பொருள்கொடுத்து வழி துறந்துவிட்டார். அந்த வானும் வரதக்ஷிணை வாங்கக் கூடிய பெரிய அந்தஸ்துள்ளவனாகவே இருந்தான். அவனுடைய பிரபாவத்தையும், கௌரவத்தையும், உத்தேசித்து இவாாக ஸந்தோஷத்தின்பேரில் திருப்தியாய்ச்செய்தகாரியமேயல்லாமல் இதற்குசாஸ்திரங்களில் அற்பம்கூட ஆதாரமே கிடையாது இதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனாலும சக்தியிருந்து திருப்தியாய் வானுக்குப் பொருள், ஆபரணம், முதலியவைகள் கொடுத்தால் அது கூடாதென்று சாஸ்திரங்களில் தடுக்கப்படவுமில்லை. இக்கருத்தைக் கொண்டுதான் திரௌபதி விவாகக் காலத்தில் தர்மபுத்திருக்கு த்ருபதராஜன் கன்னியையுடன் கூட அதிகமான திரவியமும் கொடுதது விவாகத்திற்கு முன் ஒன்றுமில்லாமல் தரித்ராாக இருந்த யுதிஷ்டிரரைச் செல்வவந்தராகச் செய்தார் என்று,

पाञ्चालराजश्च स पाण्डवश्च पुष्यत्तमौ पूजकपूज्यभावम् ।
आढ्यंभविष्णुत्वमकिञ्चनत्वं व्यत्यस्य तान्तावित्र यौतकैस्ते ॥

பாஞ்சாலராஜஶ்ச ஸ பாண்டவஶ்ச புஷ்யத்தமௌ பூஜகபூஜ்யபாவம் । ஆட்யம்பவிஷ்ணுத்வமகிஞ்சநத்வம் வ்யத்யஸ்ய தாந்தாவிவ யௌதகைஸ்தே ॥

சாஸ்திரங்களின் அபிப்பிராயம், வந்திருப்பவர்களின் கௌரவம் பந்துமுறமை, நண்பர்களின் ஹிதமான வார்த்தை முதலிய ஒன்றையும் கவனியாமல் எவரும் தோன்றியபடி எல்லாம் தைர்யமாய் வரதக்ஷிணை கேட்க முன் வந்துவிட்டார்கள். கவர்ன்மெண்டு கான்ஸ்நோட்டுக்குக்கூட 50, 100, 1000, 10000 என்கிற கணக்குண்டு. அந்தந்த நோட்டுக்கு அதநின் தொகைகள்தான் என்று தீர்மானமாய்க் கணக்கு ஏற்பட்டிருக்கின்றது. வரதக்ஷிணை என்கிற இந்த நோட்டிற்கு தொகையின் கணக்கேயில்லை. வரனின் பிதா முதலியவர்களுக்குப் பொருளில் ஆசையும் அற்பம்கூட தயையில்லாத கடின சித்தமும் பரஹிம்ஸையில் உத்ஸாகமும் எவ்வளவு அதிகமிருக்குமோ அதைஅநுசரித்து அதற்கு விவாஹகாலத்தில் பொருமானம் ஏற்படும். இதற்கெல்லாம் முதன்மையான காரணம் பொருளிலுள்ள அதிக ஆசையேயாகும். நல்வழி, தீயவழி பாபம், புண்யம், என்கிற ஒன்றையும் ஆசையென்னும் பாபி அற்பங்கூட கவனிக்கமாட்டான். இக்கருத்தையே ஒரு பெரியார் வடமொழியில் அடியில் வருமாறு கூறுகின்றார்.

जातिर्यातु रसातलं गुणगणस्तत्राप्यधो गच्छतां
शीलं शैलतटात् पतत्वभिजनस्सन्दह्यतां वह्निना ।
शौर्ये वैरिणि वज्रमाशु निपतत्वर्थोऽस्तु नः केवलं
येनैकेन विना गुणा स तृणलवप्रायास्समस्ता इमे ॥

ஜாதிர்யாது ரஸாதலம் குணகணஸ்தத்ராப்யதோ கச்சதாம்
ஸீலம் ஸைலதடாத் பதத்வபிஜநஸ்ஸந்தஹ்யதாம் வஹ்நிநா ।
ஸௌர்யே வைரிணி வஜ்ரமாஸு நிபதத்வர்தோऽஸ்து நஃ கேவலம்
யேநைகேந விநா குணா ஸ த்ருணலவப்ராயாஸ்ஸமஸ்தா இமே

எவ்விதத்திலும் பொருளைப் பெறுவதே இப்பிறவிக்குற்ற பயன் என்றுகருதிய ஒருவர் மிகவும் பெருமைவாய்ந்த தம் ஜாதி பாதாள லோகத்தை அடையட்டும். அதாவது மேல் ஜாதியிலிருந்து கீழ் ஜாதியை அடைந்தாலும் அடையவோம்.

உபபத்திராதிபர்.

## விவாஹவயது மசோதா கண்டனக் கூட்டம்.

திருவானைக்கோயில் ப்ரம்மதீர்த்த கட்டத்தில், இந்தியா சட்ட சபையிலும், சென்னை சட்டசபையிலும் ராவ்சாகிப் ஹரி விலாஸ்சாரதா, டாக்டர் முத்துலெக்ஷ்மிரெட்டி இவர்களால் கொண்டுவரப்போகிற விவாஹவயது மசோதக்களைக் கண்டிப்பதற்காக சங்கர ஸம்ஸ்கிருதகல்லூரி கணிதபோதகாசாரியர் V. S. வெங்கடராமசாஸ்திரிகள் அவர்களது அக்கிராஸனத்தில் 21-3-28 புதன்கிழமை மாலை 5-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இம்மசோதா சட்ட முறையிலும் பொருளாதாரத்துறையிலும் பல கஷ்டங்களை உண்டுபண்ணுவதாலும், மதத்தில் தலையிடுவதாலும் ஆட்சேபகரமானது மேலும் பற்பல வேறுபட்ட கொள்கைகளையுடைய இயக்கங்களைச் சார்ந்தவர்களும் பெரும்பாலும் ஸனாதந ஹிந்துக்களல்லாதவர்களும் வேறுமதஸ்தர்களுமடங்கிய சட்டசபைகள் பாரமார்த்திகக் கொள்கைகளையுடைய மதவிஷயங்களில் பிரவேசிக்கக்கூடாது என வாஸுதேவ சர்மா M.A., B.L. அவர்களால் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டது. இச்சமயத்தில் அக்கிராஸனர் வேறு ஓர் பொதுக்கூட்டத்திற்குச் செல்லவேண்டியிருந்தமையால்சங்காஸம்ஸ்கிருதகல்லூரித்தலைவர் விச்வநாத சாஸ்திரிகள் அக்கிராஸனராக அமர்ந்தார்கள். பிறகு பலர் மேற்படி மசோதாவைக் கண்டித்துப்பேசியபின் இம்மசோதாவைக் கண்டிக்கும் தீர்மானங்கள் வைச்ராய், கவர்னர் இவர்களுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது. பிறகு அக்கிராஸனரது முடிவுரையுடன் கூட்டம் பூர்த்தியடைந்தது.

## விவாஹவயதுமசோதாவிற்கு ஆக்ஷேபணைகள்.

திருவானைக்கோயில் ஸ்ரீ சங்காஸம்ஸ்கிருத காலேஜியில் ஹரி விலாஸ்சாரதா, டாக்டர் முத்துலெக்ஷ்மிரெட்டி இவர்களால் முறையே இந்தியா சட்டசபையிலும், சென்னை சட்டசபையிலும், கொண்டுவரப்படுகிற ‘ விவாகவயது மசோதாக்களைக் கண்டிப்பதற்காக மகா-ா-ஸ்ரீ V. ஜெயராமய்யர் BA, BL. அவர்களது அக்கிராஸனத்தில் ஞாயிற்றுக்கிழமை 18-3-28 மாலை 6-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அக்கிராஸனர் முதலில் மசோதாவின் பிரிவுகளை விளக்கி விட்டுப் பேசியதாவது:—

மசோதா ஸநாதனதர்மத்திற்கு விரோதமானது. ஹிந்துக்களுள் கிருஹகிருத்தியமாயுள்ள விவாகத்தில் கவர்ன்மெண்டார் தலையிடுதல் கூடாது. ஒவ்வொரு மனிதனும், மதம் பாரமார்த்திக நம்பிக்கைஇவைகளில் பெற்றிருக்கும் சுதந்திரத்தை இம்மசோதா தடைப்படுத்துவதாகும். குறிப்பிட்ட வயதிற்குட்பட்டு நடத்தப் படும் விவாகம் செல்லுபடியற்றது என சட்டத்தால் நிர்ப்பந்தம் செய்வதால் பிற்காலத்தில் சட்டமுறையிலும் பொருளாதாரத் துறையிலும் பல இடையூறுகளும் கஷ்டங்களும் நேரிடும். அவசியத்தை முன்னிட்டுக் குறிப்பிட்ட வயதிற்குட்பட்டு விவாகம் நடந்து பிறகு ஸந்ததியின்றி கணவன் இறந்தால் புருஷனுடைய சொத்திற்கு மனைவி பாத்யமற்றவளாவள். தனது உரிமையைக் காக்க கோர்ட்டை நாடவேண்டியவளாகவும் இன்னும் பல கஷ்டங்களுக்கும் இடமேற்படுகிறது.

நிற்க, மதஸம்பந்தமான விஷயங்களில் சட்டமியற்றவோ, மாற்றவோ, எடுத்துவிடவோ மதத்தலைவர்களுக்கும் மதத்தத்துவங்களில் தெள்ளிய அறிவுநிறைந்த பெரியோர்களுக்குமே அதிகாரம் உண்டு. ஹிந்துமத வாஸனையே சிறிதுமற்றவர்களும் ஹிந்துமதத்தைக்காட்டினும்வேறுமதங்களைச்சார்ந்தவர்களும்அடங்கியசட்டசபைகளுக்கு இதைத் தீர்மானிக்க யோக்கியதையில்லை. யாதாமோர் குறிப்பிட்ட விஷயத்தை விவாதிக்க அவைகளை அறிந்தவர்களே தகுதியுடையவர். மதநூற்களை அறியாதார் பிரவேசிக்க இடமில்லை. மேல்நாட்டு நாகரீகம் மிகுந்து நடையுடை ஆசாரங்களால் ஆரிய நாகரீகமிழந்து, மதக்கொள்கைகளினின்றும் வேறுபட்டு (Translation) மொழிபெயர்ப்பு மூலமாக ஏதோ சிலவற்றை அரைகுறையாகத்தெரிந்துகொண்டு மதவிஷயங்களில் தலையிடுவதே கண்டிக்கத்தக்கதாகும். அவ்விதமே மதத்தத்துவங்களை அறியாமல் பெயரளவில் ஹிந்துக்களெனக்கொண்டு மெஜாரிட்டியினால் தீர்மானிக்கப்படினும் அதுவும் நிராகரிக்கத் தகுந்ததே என்று கூறி முடித்தார்கள்.

பிறகு மேற்படி ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் சாஸ்திர ரத்னாகரம் விச்வநாத சாஸ்திரிகள் பேசியதாவது:—

பெரும்பாலும் பிராமண ஸமூகத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் பால்ய விவாக முறையில் ஏனையோர் தலையிடுதல் வேண்டாம். இவ்விஷயத்தில் மற்றவர் கவலைப்படுவது அனாவசியமானது. அவரவர்களுக்கு ஹிதமானவற்றை அவரவர் செய்து கொள்வர். ஆரோக்யக்குறைவு, வியாதி, பலஹீனம், இவைகள் பால்ய விவாகத்தால் உண்டானவை எனும் கூற்று முற்றிலும் மறுக்கத்தக்கது. பால்ய விவாகம் நடத்திவந்த பெரியோர்கள் திடகாத்திரர்களாகவும்வியாதியற்றவர்களாகவும்பலமுள்ள சந்ததியுடையவர்களாகவும் இருப்பதை ப்ரத்தியக்ஷத்தில் காண்கிறோம். ஓர் காலத்தில் பலஹீனம், வியாதி, இவைகளுக்குக் காரணமாக இராத பால்ய விவாகத்தை மற்றோர் காலத்தில் அவைகளுக்குக் காரணமெனக் கூறுவதே. இயற்கை சாஸ்திரத்திற்கு முறண்படுவதாகும். உண்மையில் நமது மத நடையுடை ஆசாரங்களையும், பழக்க வழக்கங்களையும் நூற்களின் தத்துவங்களையும், அறிந்து அனுஷ்டிக்காதிருத்தலே எல்லாக்கஷ்டங்களுக்கும் காரணமென்றும் விரிவாகப் பேசிமுடித்தனர்.

அப்பால் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷண V. S. வெங்கடராமசாஸ்திரிகள் பேசியதாவது:—

நன்மை செய்வதாகக் கூறி மத ஸம்ஸ்காரங்களை மாற்ற முயற்சிப்பது கண்டிக்கற்பாலது. தன் நிலையை ஒவ்வொருவரும் ஆலோசித்தல் வேண்டும். அறிவின் நிறைவைப்பெறாத ஒருவன் எவ்விஷயத்தையும் தவறின்றி நிச்சயமாகக்கூறமுடியாது. பால்ய விவாகத்தைப் பற்றிய எல்லா பிரச்னைகளையும் தீர்க்கமுடியாத சிலர் இம்மசோதாவை ஆதரிக்கின்றனர். நிறையறிவு பெற்றோர் எதையும் தைரியமாக வெளியிடலாம். அவ்விதமல்லாதவர் எதையும் தைரியமாகக்கூற யோக்கியதையுடையவர்களல்ல. கடவுள் ஸர்வக்ஞர் அவரது கட்டளையை அனுஸரிப்பதில் தவறு இருக்க மாட்டாது. விவாகம் முதலான ஸம்ஸ்காரங்களை விட்டாலும் முறைதவறிச் செய்தாலும் நமக்குக் கஷ்டம்தான். அல்பஅறிவு ஆயுள் படைத்த யாம் சர்வக்ஞரின் கட்டளையை மாற்றவோ, திருத்தவோ போதிய ஆலோசனைக்காலம்கூட பெற்றிருக்கவில்லை. உண்மையில் பால்ய விவாகத்தால் கஷ்டம் உண்டாகுமா? சுகம் உண்டாகுமா? என ஆராய்வோமானால் லக்ஷணக்கணக்கான

வருடங்கள் வேண்டியுள்ளன. அவ்வளவுகாலம் ஆராய்ந்த பின்னரே (Average) ல் சராசரியில் கஷ்டங்கள் அதிகம் உண்டாயினவா ,என முடிவு கூறவேண்டியிருக்கிறது. சூரியனுடைய உற்பத்தி காலத்தில் பிறந்தவரும் ஸ்ரீராமனது காலம்வரை அனேக ஆண்டுகள் வாழ்ந்து லௌகிக பாரமார்த்திகமாகிய சூக்ஷ்ம அறிவையும் பெற்றவராகிய வஸிஷ்டர் முதலிய மகரிஷிகளது வார்த்தை ஏற்கத்தக்கதே. அவர்கள் யாவரும் பால்ய விவாகத்தையே ஆதரிக்கின்றனர். ஓர் குறிப்பிட்ட கலையில் வறையரைக்குட்பட்டதும் தெள்ளிய சாஸ்திரப்பயிற்சி பெருதவருடையவும் வார்த்தை விலக்கத்தக்கது. ஸகல மதத்தினராலும் போற்றப்படுவதும் எளிதில் க்ரிஹிக்கக் கூடாத சூக்ஷ்மங்களைப்பெற்றதுமாகிய நமது மதக்கொள்கைகளையும் ஸம்ஸ்காரங்களையும் மாற்றுவது கூடாததாம். மேலும் நோயற்ற நீண்ட ஆரோக்கிய வாழ்க்கைக்கு மானஸிக, வாசிக, காயிகமெனப்படும் மூவகைப் பலங்கள் முக்கியமானவை. அவைகளுள் மானசிக பலமுண்டாக சரகசம்ஹிதையில் கூறப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான காரணங்களில் ப்ரௌடா விவாகமும் ஓர் காரணமாகக் கூறப்படவில்லை. வாசிக பலம் எனப்படுவது சப்தங்களினின்றும் உண்டாவதாம். இது மந்திர சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. மந்திரசாஸ்திரத்தில் ஒவ்வொரு எழுத்திற்குப் பல சக்திகள் கூறப்படுகின்றன. அத்தகைய மந்திரங்களுடன் செய்யப்படும் ஸம்ஸ்காரங்கள் வாசிக பலத்தையும் விதிக்கப்பட்ட ஆசாரானுஷ்டானங்களும் விலக்குகளும் தேஹிக பலத்தையும் கொடுக்கின்றன. இத்தகைய காரணங்களால் ப்ரௌடா விவாகம் ஆரோக்கியம் பலம் முதலியவற்றிற்கு காரணமல்லவென்பது தெரியவரும். நோய், பலஹீனம் முதலியவற்றிற்கும் பால்ய விவாகம் காரணமல்ல. ஆனல் மானசிக,வாசிக, தேஹிக பலத்தைக்கொடுக்கும் ஆசாரங்களினின்றும் வழுவியது தான். மேலும் 8, 10, 12, வயதுள்ள மூன்று பெண்களையுடைய ஒருவர் ஒவ்வொரு பெண்ணுக்கும் 12-வயதிற்கு மேற்பட்டு விவாகம் செய்வதானல்ப் பொருளிழந்து பரிதபிக்க நேரிடும். பொருளாதாரத்துறையிலும் மசோதா கஷ்டத்தை உண்டு பண்ணுகிறது. விவாகமெனும் ஸம்ஸ்காரம் கேவலம் போகத்தை முன்னிட்டு விதிக்கப் படாமையாலும், மறு உலகம்

பாரமார்த்திகம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப் படுவதாலும், இவ்வுலகின் சட்டங்களைவிட பாரமார்த்திக சட்டங் கள் உயர்ந்தவையாதலாலும் மதவிஷயத்தில் கவர்மெண்டும் ஏனை யோரும் பிரவேசித்தல் கூடாதென உருக்கமாகப் பேசினார்கள். பிறகு வாசுதேவசர்மா M.A., B L. பேசியதாவது: —

ஆஸ்திகர்களாகிய யாம் பால்யவிவாகத்தை நடத்தக்கடமைப் பட்டிருக்கிறோம். வேதத்தைப்ப்ரமாணமாகக்கொள்ளின்இதுவே சிறந்த வழியாகும் என பல மேற்கோள்கள் எடுத்துக்காட்டி, தமிழ் மக்களும் பண்டைகாலத்தில் பால்ய விவாகத்தையே ஆத ரித்து வந்ததாகத் தமிழ் நூற்களினின்றும் எடுத்துக்காட்டினார். காமவெறி குடிகொள்ளும் பருவத்தில் விவாகம் செய்வதனால் காமவெறி மக்களே உண்டாவர். ஆதலால் ப்ரௌடாவிவாகம் நீக்கத்தக்கது. இறை நானூறு, தொல் காப்பியம் இவைகளை ஆராய்ந்தால் பண்டைத்தமிழர்கள்பால்யவிவாகத்தை ஆதரித்தது தெரியவரும். ஐங்குறுநூறு 128-சூத்ரமும் சிலப்பதிகாரம், கண்ணகி வயது, கோவலன் வயது, இவையும் தொல்காப்பியம் 125-சூத்ரமும், இவற்றை ஆதரிக்கின்றன. இறையினார் அகப் பொருள் உறையும் இதற்கு ஆதாரமாகும் 'பதினோரு ஆண்டும் பத்துதிங்களும்' ...... என்பதையும் 'காணமென்னும் ஓர் வகை விவாகச்சடங்கைக் குறிக்கும் சொல்லும் பால்ய விவாகத் தின் உயர்வையே போதிக்கின்றது. மேலும் சர்க்கார் என்பவர் இந்தியாவில்பால்யவிவாகமுறை சுகத்திற்குக்காரணமாகவேயிருப் பதாயும் இந்தியர்களுக்குப்பாதகமொன்றுமில்லை யெனவும் பெ ரும்பாலும் ப்ரௌடா விவாகம் நடைபெற்றுவரும் மேல் நாட் டைக் காட்டிலும் நம நாட்டில் மிகவும் குறைவான விவாக வழ க்குகளே ஏற்படுகின்றனவென்றும் மேல்நாட்டில் நடந்துவரும் விவாகரத்து முதலான பல கேவலமான வழக்குகள் ப்ரௌடா விவாகத்தால் ஏற்படுவதாயும் உலக இச்சைகளில் உழலும் மேல் நாடுகளைவிட நம் நாடு பாரமார்த்திகத் துறையில் உயர்ந்திருப்ப தற்குக் காரணம் பாரமார்த்திகக் கொள்கைகளை ஆதாமாகக்கொ ண்ட நம் மதக்கடமைகள் எனப்படும் ஸம்ஸ்காரங்களே என்றும் எனவே இத்தகைய மதஸம்ஸ்காரம் போற்றத் தக்கதெனவும் எல்லா வழியிலும் மசோதாவைக் கண்டிப்பதாகவும் அறிவித்தார். பிறகு ப்ராணதார்த்தி சாஸ்திரிகள் பேசியவுடன் மசோதாவைக்

கண்டிக்கும் தீர்மானம் ஸபையினரால் அங்கீகரிக்கப்பட்டு வைச்ராய், கவர்னர், இவர்களுக்கு அனுப்ப அக்ராஸனருக்கு அதிகாரமளிக்கப்பட்டது. அக்ராஸனரின் முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது பூர்த்தியடைந்தது.

ஆர். நடராஜன்.

## விவாஹவயது மசோதா கண்டனப் பிரசாரங்கள்.

கும்பகோணம், ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காராசார்யசுவாமிகளால் ஷை கண்டனத்திற்காக கௌரவப் பிரசாரகராக நியமித்திருக்கிற வி. உமாமகேச்வரசாஸ்திரிகள் ஏற்கனவே ஆர்யதர்மத்தில் வெளிவந்தவிடங்கள் போக கிழ்க்கண்டபடி பிரசாரங்கள் செய்தார்.

### கோமாக்ஷி

பிராமணர்கள் நிறைந்த இவ்வூரில் 9-3-28 இரவு 8-மணிக்கு பிரம்மஸ்ரீ ராமனுஜசாஸ்திரிகள், T. V. தீக்ஷிதர், ஸப்ரிஜிஸ்டார், ஸப்பஸிஸ்டன்ட் ஸர்ஜன், குட்டிகுா நடேசய்யர் முதலான அனேக பிராமணர்கள் ஸமூஹத்தில் ஷை மசோதாவைக் கண்டித்துப் பிரசங்கித்து முடிவில் கவர்னருக்கும், வைச்ராய்க்கும் கண்டனத்தீர்மானமும், மஹஜரும் அனுப்பதீர்மானிக்கப்பட்டது. பிரசங்கத்திற்கு முன் விதண்டையாடினவரும் முடிவில் சந்தோஷத்துடன் அங்கீகரித்தார்.

### சுவரப்பட்டு

11-3-28 காலை 8-மணிக்கு V. M. வேம்புவையரின் முயற்சியால் இங்கே ஸபைகூடிற்று. ஆண் பெண் இருபாலரும் வந்திருந்தனர். சுப்பிரமணியய்யர், சுவாமிநாத வாத்தியார் முதலான உள்ளூர்பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். 9-மணிக்கு உபந்யாஸ முடிவில் மஹஜர்பாரங்களில் ஏகமனதாய்க்கையெழுத்திட்டு கவர்னர் & கவர்னர்ஜனரல் இவர்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

### புவனகிரி

12-3-28 மாலை 8-மணிக்கு இவ்வூர் மிடில்ஸ்கூல் தலைமை உபாத்தியார் முயற்சியின்பேரில் சாமுண்டேசுவரி அம்மன் கோவிலில் ஓர் பெருங்கூட்டம் கூடிற்று. பிராமணர்களும் இதரர்களும் சுமார் 200-பேர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தார்கள்.

D. P. W. ஓவர்ஸியர், கோ-ஆப்ரேடிவ் பாங்கி தலைவர், எல்லா உபாத்தியார்களும் மற்றுமுள்ள உத்யோகஸ்தர்களும், பள்ளிக்கூடம் டிப்டி இன்பெக்டர், உள்ளூர் கிருஹஸ்தர்கள்முதலானவர்கள் ஆதரவுடன் வந்திருந்தனர். தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமான் N. ஸ்ரீனிவாஸய்யர் உபந்யாசகரைச் சபையோர்க்கு அறிமுகம் செய்துவைத்துப் பிரசங்கிக்கும்படி வேண்டினர். அதன்பிறகு $1\frac{1}{2}$-மணிநோம் ஷெ மசோதாவைக் கண்டித்தும் நமது விவாகத்தில் இருக்கும் சாதகத்தையும் விளக்கி மகஜரில் எல்லோரும் கையெழுத்திட்டு அனுப்ப ஏற்பாடுசெய்தது. பிரசங்க முடிவில் N. ஸ்ரீனிவாசய்யர் முடிவுரையாகப் பேசுகையில் நமது ஆசார்யளால் "கிருஹ்யக்ஞ" என்கிற பட்டம் சாஸ்திரியாருக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அது உசிதமென்பதைத் தாங்கள் இபபோது நேரில் அறிவீர்களென்றும், சாஸ்திரிகள் பிரதிப்பிரயோஜனம் கருதாது கௌரவப் பிரசாரம் செய்கிறவர்களென்றும் குறிப்பிட்டார்.

### சிதம்பரம்

10-3-28 ல் ஸ்ரீமான் மகாமகோபாத்யாய சிவதண்டபாணி சுவாமி தீக்ஷிதர், ராஜா ஸோமசேகா தீக்ஷிதர், ராகவசாஸ்திரிகள், பரமேசுவர சாஸ்திரிகள், வக்கீல் V. சுப்பிரமணியய்யர், M. S. சுப்பிரமணியய்யர் B.A., B.L. இவர்கள் போன்ற பல பிரமுகர்களிடம் ஆலோசனை செய்ததில் ஜில்லாஸபை கூடும்பொழுது விஜயம் செய்வதாக அங்கீகரித்தார். ஏற்கனவே 5-மீட்டிங்குகள்கூடித் தீர்மானம் அனுப்பியாய்விட்டது.

### திருப்பாதிரிப்புலியூர்

15—3—18 தேதிகளில் வக்கீல்கள் O. R. ரகுபதிசாஸ்திரிகள், குப்புஸ்வாமி அய்யங்கார், R. ஸ்ரீநிவாஸாசாரி, பென்ஷன் ஸால்ட் இன்ஸ்பெக்டர் ஐ. நாராயணஸ்வாமி அய்யர், பென்ஷன் ஜில்லா ரிஜிஸ்டிரார் பி. கிருஷ்ணஸாமி அய்யர், கானப்பேட்டை பண்டிட் வெங்கடராமசாஸ்திரிகள் முதலானவர்களைக் கண்டும், வைச்ய, வாணுவ, சோழிய செட்டியார்களையும் இதில் ஒத்துழைக்கும்படி சொல்லி இவ்வூரிலே ஏப்ரல் முடிவில் ஜில்லாமகாஸபை கூட்டுவதாகவும், விஷயாலோசனைக்கமிட்டி கூடும்பொழுது தேதி குறிப்பிடுகிறதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

### விழுப்புரம்.

16-3-28 ல் இங்குள்ள வக்கீல்கள் M. S. வெங்கடராமய்யர், V. B. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஜயராமய்யர் B.A., L.T. பண்டாபீஸ் V. ஜானகிராமய்யர், மற்றுமுள்ள பிரமுகர்களுடன், கலந்ததில் ஏற்கனவே மீட்டிங்கு நடத்தித்தீர்மானங்கள் அனுப்பி விட்டபடியால் இப்பொழுது தனியாக மீட்டிங்குத் தேவையில்லையென்றும், ஜில்லாசபை கூடும்படி ஆசார்யாள் சம்மதமிருந்தால் இங்கேயே நடத்தலாமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

### வளவனூர்

17-3-28 மாலை 7-மணிக்கு இவ்வூர்பெருமாள்கோவிலில்ஏகாதசி உத்ஸவமானவுடன் இவ்வூர் மஹாஜனங்கள் இங்கே ஸபை கூடினார்கள். பிர்ம்மஸ்ரீ பண்டித கச்சி சாஸ்திரிகள், சுப்புவாத்தியார், ராஜாவாத்தியார், ஸ்ரீமான்கள் V. T. ராமசுவாமி அய்யர், V. T. கிருஷ்ணசாமி அய்யர், D. குப்புசாமி அய்யர், J. K. R. சுப்பிரமணியஅய்யர், வெங்கட்டராமய்யர், முதலான பிரமுகர்களும், ஸ்திரீமகாஜனங்களும், குழுமியிருந்தனர். ஸ்ரீ கச்சி சாஸ்திரிகள் நமது ஆசாரியாளுக்கு நம்மிடம் இருக்கும் கருணை அபாரமென்றும், எவ்வளவு தூரத்திலிருந்தாலும் நம்மைமறவாமல்அனுக்கிரஹிக்கிறார்கள் என்றும், இங்கு வந்திருக்கும் சாஸ்திரிகளால் சொல்லப்படுவதெல்லாம் ஸ்ரீஆசார்யாள்திருவாக்காகவே பாவிக்க வேண்டுமென்றும "ஸுப்ரஹ்மண்ய:" ஸுப்ரஹ்மண்யோஸ்ய: என்ற வாக்கியத்தில் உ காரம ய காரமானதுபோல் ஆசார்யாள்கிருபை தான் நமக்கு ரூபாந்தகரமாக வந்ததாக எண்ணவேண்டுமென்றும் கூறி விவாகமசோதா கொண்டுவந்திருப்பதைக் கண்டித்தார். பிறகு உமாமகேசுவர சாஸ்திரிகள் ஒருமணிநேரம் வேதம், சூத்ரம், முதலியவற்றால் நமது விவாக மேன்மையைப் பிரஸங்கித்து இதைச் சட்டத்தால் கட்டுப்படுத்துவது தகாது என்று உபன்யஸித்தார். ராஜாவாத்தியார் இதை ஆமோதித்துப் பேசினார். பிறகு எல்லோரும் ஏகமனதாய் மகஜரில் கையெழுத்துச் செய்தும், இம்மாதிரி தூண்டுகோலில்லாததனால் இதுவரைமீட்டிங்குகூட இயலாததையும், கூறிவருத்தமுற்று, ஆசார்ய ஜயகோஷத்துடன் இனிது நடைபெற்றது. இதுவிஷயமாய் V. T. ராமசுவாமி அய்யர் முயற்சியும், R. சுப்பிரமணியய்யர் உழைப்பும் பாராட்டத்தக்கதே.

N. வெங்கட்டராமன்.